பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 25 திங்கட்கிழமை 09.01.2023 கதிர் 315

## வட மாகாண கடமைகளை பொறுப்பேற்ற குணரட்ண



(இ. கலையமுதன்)

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக மஹிந்த குணரட்ண தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். 8


# உள்ளூராட்சி சபைத் தேர்தல் 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பு?




### பல காரணங்களைத் தேடுகின்றது அரசு

எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்திருந்த நிலையில், பல காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நான்கு மாதங்களுக்கு அதாவது, ஜூலை மாதம் வரை ஒத்தி வைப்பதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. 8

## இழுபறியில் ஆளுநர்கள் நியமனம் ரணில் மீது அதிருப்தியில் 'மொட்டு'



ஒன்பது மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமனம் மேலும் தாமதமாகின்றன. இதனால் மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றார்கள் என்று அறியமுடிகின்றது.

மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமன விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் (மொட்டுக் கட்சி) இடையில் சில மாதங்களுக்கு முன் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

மொட்டுக் கட்சி சார்பில் ஐந்து ஆளுநர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 2

## தமிழரசு திருந்த வேண்டும்

### இல்லையேல் புளொட்டும் ரெலோவும் திடமான முடிவை எடுக்க வேண்டும் என்கின்றார் சுரேஷ்



தமிழ்த் தரப்புக்கள் ஒன்றாக இல்லை. முதலில் நீங்கள் ஒன்றுபடுங்கள். அதன் பின்னர் தீர்வைக் கேட்கலாம் என்று சிங்களத் தலைவர்களின் கிண்டலுக்கே இடம்கொடுத்துள்ளது இலங்கைத் தமிழரசுக் கட்சி. அந்தக் கட்சி 2

## யானையுடன் சேர்வதா? இல்லையா? 'மொட்டு'க்குள் இரு நிலைப்பாடுகள்




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதா இல்லை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 2

## சர்வகட்சி மாநாட்டை நாம் புறக்கணிப்போம்

### ரணிலை மிரட்டும் மனோ



தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு திட்டம் சம்பந்தமாக மலையகக் கட்சிகளுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 8

## பரந்துபட்ட கூட்டமைப்புக்கு தமிழரசு இணங்க வேண்டும்

### நிபந்தனை விதிக்க ரெலோ, புளொட் முடிவு




உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தனித்து எதிர்கொள்ளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் யோசனையை பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் என்பன நிராகரித்துள்ளதையடுத்து கூட்டமைப்பாக – ஒன்றாக 8

## தேர்தலில் ஐ.தே.க. இரு வழிப் பயணம்

### கட்சியின் பொதுச் செயலர் அறிவிப்பு



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது கட்சி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடும் 2

## மேயர் வேட்பாளராக களமிறங்கும் முஜிபுர்?



ஐக்கிய மக்கள் சக்தியின்கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற 2

## வீட்டில் 350 கஞ்சா செடிகள் வைத்திருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கைது!



மொனராகலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

350 கஞ்சா செடிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் 2


## தேர்தலில் இருந்து ஒதுங்கும் 'மொட்டு'வின் உறுப்பினர்கள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் அதிகமானவர்கள் இந்தத் தடவை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். அவ்வாறு 20 வீதமான உறுப்பினர்கள் தேர்தலில் இருந்து ஒதுங்குகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் அதிருப்தி அடைந்தே அவர்கள் இவ்வாறு ஒதுங்குகின்றார்கள் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓட்டோவுக்குள் கைவிடப்பட்ட பத்து நாள்களேயான குழந்தை

### தாய்ப்பால் ஊட்டிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்



நுவரெலியா மாவட்டம், கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரில், ஓட்டோ ஒன்றுக்குள் கைவிடப்பட்டிருந்தநிலையில்பெண்சிசுஉயிருடன்மீட்கப்பட்டுள்ளது.

பிறந்து 10 நாட்களேயான குழந்தையே இவ்வாறு கைவிடப்பட்டுள்ளது. 2

## தமிழரசு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த வேண்டும். இல்லையேல் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும்தான் தெளிவான முடிவை எடுக்கவேண்டும் – என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய முடியாது என்றும், பரந்துபட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக்கு ஒருபோதும் இடமில்லை என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பரந்துபட்ட கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான பேச்சுக்களில் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து வரும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரிடம், தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

’தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வதில்லை என்று அவர்கள் நீண்ட காலமாகக் கூறிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்போது மீண்டும் அதைச் சொல்லியிருக்கின்றார்கள்.

பல்வேறு விடயங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும் நிலையில்தான், பரந்துபட்ட கூட்டமைப்புக்கான கோரிக்கையை பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் முன்வைத்தன. அதைத் தமிழரசுக் கட்சி நிராகரித்துள்ளது. ஒன்றில் தமிழரசுக் கட்சி திருந்த வேண்டும். இல்லையேல், புளொட்டும், ரெலோவும் தெளிவான – திடமான முடிவை எடுக்க வேண்டும். பரந்துபட்ட கூட்டமைப்பு அமைப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் – என்றார்.

## இழுபறியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு ஆளுநர்களும் நியமித்தல் என்பதே அந்த இணக்கப்பாடு.

ஆனால், ஜனாதிபதி எதுவித காரணமும் இன்றி அந்த நியமனங்களை இழுத்தடிக்கின்றார் என்று மொட்டுக் கட்சி எம்.பிக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஏற்கனவே, அமைச்சரவை நியமனம் கூட அப்படியே கிடக்கின்றது. இதனால் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் மீது கடும் அதிருப்தியில் உள்ளார்கள் என்று அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வீட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல் ஒன்றுக்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வீட்டில் நேற்றிரவு விசேட அதிரடிப் படையினர் சோதனைகளை நடத்தினர்.

இதன்போது, 350 கஞ்சா செடிகள் மற்றும் நவீன உலோக ஸ்கேனர் இயந்திரம் என்பன மீட்கப்பட்டன.

சந்தேகநபரை மொனராகலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

## ஓட்டோவுக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சிசுவை இன்று காலை தலவாக்கலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

பின்னர் அந்தச் சிசுவுக்குத் தலவாக்கலைப் பொலிஸ் நிலையத்திலுள்ள பெண் கான்ஸ்டபிள் ஒருவரால் தாய்ப்பால் ஊட்டப்பட்டு, லிந்துலை வைத்தியசாலையில்ஒப்படைக்கப்பட்டது.

சி.சி.ரி.வி. கமராவின் காட்சிகளை அடிப்படையாகக்கொண்டு, குழந்தையைக் கைவிட்டுச் சென்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணை வேட்டையில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

## யானையுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவதா என்பது பற்றி அந்தக் கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

பஸில் ராஜபக்ச உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள்சிலர்தனித்துப்போட்டியிடும் நிலைப்பாட்டில் உள்ளனர் எனவும், வேறு சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர் எனவும் தென்னிலங்கை வாராந்தப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

யானைக் கட்சியோ மொட்டுக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவதற்குத் தயாராக இருக்கின்றது.

மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பல தடவைகள் சந்தித்து களநிலவரம் பற்றி பஸில் ஆராய்ந்தார். அப்போது அதிகமானவர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றே கூறினார்கள். கிராம மட்டத்தில் யானைக்குச் செல்வாக்கு இல்லை என்றும் அவர்களுடன் சேர்ந்து போட்டியிட்டால் தோல்வியடைந்து விடுவோம் என்றும் அவர்கள் கூறினர்.

ஒருவேளை இணைந்து போட்டியிட்டால் மொட்டுச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என அவர்கள் கூறி இருந்தனர். இதனைத் தொடர்ந்தே தனித்துப் போட்டியிடுதல் என்ற நிலைப்பாட்டைப் பஸில் எடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

இருந்தும், இது தொடர்பில் இரண்டு கட்சிகளும் பேசி இறுதி முடிவு எட்டப்படும் என மொட்டுக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது – என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்குச் சில உள்ளூராட்சி சபைகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம், அவ்வாறு இல்லாத உள்ளூராட்சி சபைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்றும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள நிலையில், தற்போது வேட்பாளர்களின் பெயர் விபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

திறமையான புதியவர்களுக்கு அதிக இடங்கள் வழங்கப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## மேயர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், எம்.பி. பதவியை இராஜிநாமா செய்துவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது.

கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும் நோக்கில் மேயர் வேட்பாளராக அவரைக் களமிறக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. தெற்கு ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாளை நிலைமை மாறலாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதன் எதிர்காலம் குறித்த முக்கிய சந்தியில் இன்று உள்ளது. இச்சமயத்தில் கூட்டமைப்பின் கட்டமைப்புத் தொடர்பில் 'த ஹிந்து' நாளிதழின் கொழும்புச் செய்தியாளர் மீரா ஸ்ரீநிவாசன் வரைந்து உள்ள கட்டுரை ஒன்று வெளியாகியிருக்கின்றது.

"இரு தசாப்தங்களாக இயங்கிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதில் பெரும்பாலான காலப் பகுதியில், நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு தென்னிலங்கை சிங்களத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறது." – என்று அக்கட்டுரையை ஆரம்பிக்கும் அவர், அதன் முத்தாய்ப்பாய் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"அரசியல் தீர்வினைக் காண்பதற்கான தன் முயற்சியைத் தொடர்ந்த கொண்டிருக்கின்ற அதேவேளை, கூட்டமைப்பு அதன் கட்டமைப்புக்களை ஜனநாயகப்படுத்துவதற்கோ, ஏனைய தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகள் உட்பட வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான தந்திரோபாயம் எதையும் வகுப்பதற்கோ அல்லது பெண்களுக்கு கணிசமான வாய்ப்புக்களைக் கொடுப்பதற்கோ செயற்பாடு எதையும் அக்கறையுடன் முன்னெடுப்பதாக சான்று எதையும் காணவில்லை. கூட்டமைப்பின் எதிர்காலம் நிச்சயமற்றது. ஆனால், அதற்கான மாற்று ஒன்றை தமிழ் அரசியல் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை." – என்று அவர் இறுதியில் முடிக்கின்றார்.

இவை, அவ்வளவும் முக்கியமான – உண்மையான – யதார்த்தமான – கருத்துப் பதிவுகள் ஆகும்.

கூட்டமைப்பின் பெரும் குறைபாடுகளை குறைந்த சொற்களில், நிறைந்த அர்த்தத்தில், இறுக்கமாகவும் சுருக்கமாகவும், இந்த இறுதிப் பந்தியில் அழுத்திக் கூறி இருக்கின்றார் 'தி ஹிந்து' செய்தியாளர்.

தவிரவும், இந்தப் பின்னடைவுகள் தனித்து கூட்டமைப்புக்கு உரியவை மட்டுமல்ல. அவற்றையும் தாண்டி, கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கும் கனகச்சிதமாக அவை பொருந்தும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்பர். பிரதான பங்காளிக் கட்சி எப்படியோ, அப்படித்தான் கூட்டமைப்பின் போக்கும் இருக்கும்.

கட்டுரையாளர் மீரா ஸ்ரீநிவாசன் குறிப்பிடுகின்றமை போல கூட்டமைப்புக்கு மாற்று ஒன்று இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது இன்றைய நிலைமைதான்.

நாளை நிலைமை மாறலாம். தமிழ் மக்கள் என்ற இனக் குழுமம் என்றும் விட்டேத்தியாகப் பார்த்துக் கொண்டு இருக்கப் போவதில்லை. கூட்டமைப்பு தலைவர்களின் கவனத்திற்கு இந்த அலாரம் எச்சரிக்கை.

# இடைநிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலையின் 2 ஆம் மின்னுற்பத்தி இயந்திரம் செயற்பாடு!

## மின்சார சபை அறிவிப்பு

திருத்தப்பணிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாம் மின்னுற்பத்தி இயந்திரத்தை தேசிய மின்கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இன்று இரண்டாம் மின்னுற்பத்தி இயந்திரம் தேசிய மின்கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மின்துண்டிப்பு காலத்தை குறைப்பதற்கான தீர்மானங்கள் எவையும் இதுவரையில் வெளியாகவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இந்தியத் துணைத் தூதுவரிடம் மகஜர்!



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு யாழில் மேற்கொண்டு வருகின்ற போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்றைய தினம் யாழில் உள்ள இந்திய துணை தூதுவரை சந்தித்து மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளது.

அரசுடனான பேச்சுவார்த்தையின் போது சமஷ்டி அடிப்படையிலான தீர்வைத் தமிழ் தரப்புகள் ஒருமித்து வலியுறுத்த வேண்டுமென கோரி வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு யாழ்ப்பாணம் நாவற்குழியல் கடந்த வியாழக்கிழமை முதல் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்றைய தினம் யாஜில் உள்ள இந்தியதுணைத்தூதுவராலயத்தில் துணைத்தூத ரை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தனர்.

இதன்போது தூதுவரிடம் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் கையளித்துள்ளனர்.

# பண்டிதருக்கு இன்று நினைவேந்தல் நிகழ்வு





யாழ்ப்பாணம் – வல்வெட்டித்துறைப் பகுதியில், தமிழீழ விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினரான கப்டன் பண்டிதரின் 38ஆம் ஆண்டு நினைவு தினம் அவரது இல்லத்தில் இன்று திங்கட்கிழமைஅனுஷ்டிக்கப்பட்டது.

பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமையுடன் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தாரும் இணைந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அச்சுவேலியில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமை படையினர் முற்றுகையிட்டதால் ஏற்பட்ட சமரில் கப்டன் பண்டிதர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் மொட்டுக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக கொழும்பு மாவட்டத்திற்கான கட்டுப்பணத்தை இன்று (திங்கட்கிழமை) செலுத்தியுள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் அக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு வந்து தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

# புட்டிப் பால் புரைக்கேறி 2 வயதுப் பாலகன் சாவு

மஸ்கெலியா தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு வயது பாலகன் ஒருவன் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளான்.

நேற்றுக் காலை புட்டிப் பால் அருந்திக் கொண்டிருந்த இரண்டு வயதான குறித்த பாலகன், மூச்சு திணறல் ஏற்பட்டு மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, உயிரிழந்துள்ளான்.

பாலகனின் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பாலகனின் தொண்டையில் பால் அடைத்ததால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

# சீனாவில் 20 முக்கிய விஞ்ஞானிகள் ஒரே மாதத்தில் பலியான பேரதிர்ச்சி



பீஜிங், ஜன.09

சீனாவில் உருமாறிய கொரோனா தொற்றுக் கோரத்தாண்டவம் ஆடி வருகிறதுடன், அங்கு போடப்பட்டிருந்த கொரோனா கட்டுப்பாடுகள் கடந்த மாதம் நீக்கப்பட்டன. இதனால் தொற்றுப் பரவலும், உயிரிழப்புகளும் பல மடங்கு அதிகரித்து உள்ளன.

இதற்கிடையே சீன என்ஜினீயரிங் அக்கடமியை சேர்ந்த முக்கிய என்ஜினீயர்கள் மற்றும் விஞ்ஞானிகள் 20 பேர் கடந்த ஒரு மாதத்துக்குள் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக டிசம்பர் 15 முதல் கடந்த 4ஆம் திகதிக்குள் இத்தனை மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

சீனாவின் மிகவும் புகழ்பெற்ற என்ஜினீயரிங் அக்கடமியான இதில் 900 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். நாட்டின் மிகப்பெரிய திட்டங்களில் இவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது ஆகும். ஆனால் எந்தவொரு விஞ்ஞானியின் உயிரிழப்புக்கும் குறிப்பிட்ட காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு மாதத்துக்குள் இவ்வளவு முக்கிய பிரபலங்கள் உயிரிழந்திருக்கின்றமை சீனாவில் முதல் முறையாகும். அங்கு கடந்த 2017-2020 ஆண்டு காலகட்டத்தில் சராசரியாக ஆண்டுக்கு 17 பேர் உயிரிழந்து இருந்தனர். ஆனால் இந்த ஒரு மாதத்துக்குள் 20 பேர் உயிரிழந்திருக்கின்றமை நாட்டில் பேரதிர்ச்சியை ஏற்ப டுத்தி இருக்கிறது.

## ரஷ்யா – உக்ரைன் சிறை கைதிகள் பரிமாற்றத்தில் 100 இராணுவ வீரர்கள் நாட்டுகளுக்குத் திரும்பினர்



கீவ், ஜன.09

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் இடையேயான போரானது 10 மாதங்களுக்கும் கூடுதலாக நீடித்து வருகிறது. இதில், இரு நாட்டை சேர்ந்த வீரர்களும் உயிரிழந்து வருகின்றனர். அவர்களில் சிலர் சிறை பிடிக்கப்பட்டு வருகின்றனர். பின்னர் அவர்கள் விடுவிக்கவும் செய்யப்படுகின்றனர்.

இந்த நிலையில், ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் –

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கி நடந்து வரும் போரின் ஒரு பகுதியாக நடந்து வரும் சிறை கைதிகள் பரிமாற்றத்தின்படி, உக்ரைனால் சிறை பிடிக்கப்பட்ட 50 ரஷ்ய ராணுவ வீரர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். பேச்சுவார்த்தை நடத்தியதன் தொடர்ச்சியாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இது 36 ஆவது கைதிகள் பரிமாற்ற நிகழ்வு ஆகும் எனத் தெரிவித்து உள்ளார்.

இதேபோன்று உக்ரைன் நாட்டு அதிபர் அலுவலக தலைவர் ஆண்டிரி எர்மேக் கூறும்போது – ரஷ்யாவால் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்ட 50 உக்ரைன் இராணுவ வீரர்கள் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். – என தெரிவித்து உள்ளார்.

இதன்படி, செர்னோபில் அணு உலை, செர்னிவ், டோனெட்ஸ்க், மரியுபோல், கெர்சன், கீவ் மற்றும் பிற பகுதிகளில் பிடிபட்ட வீரர்கள் உக்ரைனுக்குத் திரும்பி வந்துள்ளனர் என அதுபற்றிய அறிக்கை தெரிவிக்கின்றது. இது கடைசி பரிமாற்றம் இல்லை. எங்களுடைய அனைத்து மக்களையும் திரும்ப பெறும் பணி தொடர்ந்து நடைபெறும். அதனை நாங்கள் நிறைவேற்றுவோம் என அவர் கூறியுள்ளார். இந்தச் சூழலில், ரஷ்யா அறிவித்து இருந்த போர்நிறுத்த ஒப்பந்தம் கடந்த சனிகிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து, கார்கிவ் நகரிலுள்ள மெரீபா பகுதியின் மீது 2 ராக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் குடிமக்களில் ஒருவர் உயிரிழந்து உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரேசிலின் நாடாளுமன்றத்திற்குள் புகுந்து வன்முறையாளர்கள் கூட்டம் வெறியாட்டம்!

### பொருள்களை அடித்து நொறுக்கிச் சேதம் விளைவிப்பு



பிரேசிலா, ஜன.09

பிரேசில் நாட்டில் சமீபத்தில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் அதிபர் போல்சனேரோ தோல்வியடைந்தார். முன்னாள் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா வெற்றிபெற்றார். இதையடுத்து, பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்றுக்கொண்டார். வாக்கு வித்தியாசம் மிகக்குறைவாக இருந்த நிலையில் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், போல்சனேரோவின் ஆதரவாளர்கள் இன்று பிரேசில் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலில் போல்சனேரோ தோல்வியடைந்தார் என அறிவிக்கப்பட்ட நிலையில் அதை ஏற்றுக் கொள் ளாத அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

அதேபோல், ஜனாதிபதி மாளிகை, உச்ச நீதிமன்ற வளாகம் முன் திரண்ட போல்சனேரோ ஆதரவாளர்கள் தற்போதைய அதிபர் லூயிஸுக்கு எதிராகக் கோங்களை எழுப்பி, வருகின்றனர். போல்சனேரோ ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், உச்ச நீதிமன்றம், ஜனாதிபதி மாளிகை முன் திரண்டமையால் பிரேசிலில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், பிரேசில் நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அமெரிக்கா கன்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதிபர் ஜோ பைடன் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், பிரேசிலில் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலையும், அமைதியற்ற் முறையில் அதிகாரத்தை மாற்றுவதையும் நான் கண்டிக்கிறேன். பிரேசிலின் ஜனநாயக நிறுவனங்களுக்கு எங்கள் முழு ஆதரவு உள்ளது.

வர்களின் விருப்பத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தக் கூடாது. பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவுடன் தொடர்ந்து பணியாற்ற ஆவலுடன் உள்ளேன் என பதிவிட்டுள்ளார்.

## இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதின; பயங்கர விபத்தில் 40 பேர் உயிரிழப்பு

### செனகல் நாட்டில் அதிர்ச்சிச் சம்பவம்



டகர், ஜன.09

மேற்குஆப்பிரிக்காவில் அமைந்துள்ள செனகல் நாட்டின் கப்ரினி நகரில் நேற்று மாலை நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதின. இந்தக் கோர விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர். மேலும், 87 பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். டயர் வெடித்ததில் கட்டுபாட்டை இழந்த பஸ் சாலையின் எதிரே வந்த மற்றொரு பஸ் மீது மோதி இந்த விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த பஸ் விபத்தில் படுகாயமடைந்த பலரின் உடல்நிலை மோசமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றதாகக் கூறப்படுகின்றது.

# தமிழ்நாடு அரசின் உரையைத் தம்பாட்டில் மாற்றி வாசித்த கவர்னரினால் குழப்ப நிலை





சென்னை தமிழ்நாடு அரசு தயாரித்த உரையை கவர்னர் முறையாகப் படிக்கவில்லை. உரையில் கவர்னர் சொந்தமாக சேர்த்துப் படித்த எதுவும் அவைக் குறிப்பில் இடம்பெறாது. என சட்டப்பேரவையில் கவர்னர் முன்பே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்தார். சட்டப்பேரவையில் அச்சிடப்பட்ட உரையை வாசிக்காமல் மரபை மீறி கவர்னர் செயல்பட்டுள்ளார்.

அச்சிடப்பட்டது இல்லாமல் கவர்னர் பேசியது அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திராவிட மாடல் மட்டுமின்றி பெரியார், அம்பேத்கர், காமராஜர், அண்ணா, கலைஞர் பெயர்களையும் ஆளுநர் படிக்காமல் புறக்கணித்தார். அச்சடிக்கப்பட்ட உரையை ஆளுநர் முறையாக படிக்காதது தவறு. உரையில் இடம் பெறாமல் ஆளுநர் சொந்தமாக சேர்த்து கொண்டவை அவைக் குறிப்பில் இடம் பெறாது என முதல்வர் கூறினார்.

அரசு தயாரித்து கொடுத்த உரையை முறையாக படிக்காத ஆளுநருக்கு பேரவையில் முதலமைச்சர் கண்டனம் தெரிவித்தார். அரசு தயாரித்த, ஆளுநரால் இசைவளிக்கப்பட்ட அச்சிடப்பட்ட உரையை முறையாக படிக்காதது வருந்தத்தக்கது. ஆளுநர் உரை தொடங்குவதற்கு முன் எங்கள் எதிர்ப்பு எதையும் பதிவு செய்யவில்லை எனவும் ஸ்டாலின் கூறினார்.

முதல் அமைச்சர் பேசியதும் கவர்னர் பாதியில் புறப்பட்டார். சட்டப்பேரவையில் அரசின் உரையில் பல பகுதிகளை தவிர்த்தற்கு, முதல் அமைச்சர் கண்டனத்தை அடுத்து பாதியில் வெளியேறினார்.

2023 ஆம் ஆண்டிற்கான முதல் சட்டப்பேரவை கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை வளாக கூட்டரங்கில் இன்று காலை 10 மணிக்கு கூடியது. ஒவ்வொரு ஆண்டும் முதல் கூட்டம் கவர்னர் உரையுடன் தொடங்குவது மரபு. அதன்படி, தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி உரையுடன் இந்தாண்டுக்கான கூட்டம் தொடங்கியது. சட்டமன்ற வளாகத்தில் ஆளுநருக்கு காவல்துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

2023ம் ஆண்டிற்கான முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடர் கவர்னர் உரையுடன் தொடங்கியது. சட்டப்பேரவையில் தமிழில் உரையை தொடங்கினார் கவர்னர் ஆர்.என்.ரவி. அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தமிழில் கூறி கவர்னர் ஆர்.என்.ரவி பேசத்தொடங்கினார்.

கவர்னர் ரவியின் உரையை எதிர்த்து கூட்டணி கட்சிகள் கூச்சல் எழுப்பினர். அமளியில் ஈடுபட்டனர். கவர்னரை திரும்ப பெற வேண்டும் என்று கோம் எழுப்பினர். கவர்னரை பேச விடாமல், எம்.எல்.ஏ.க்கள் எதிர்ப்பு தெரிவித்து முழக்கம் எழுப்பினர். ஒன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காததற்கு கண்டனம் தெரிவித்தனர்.

## கேரளத்தின் உள்துறை செயலர் குடும்பத்துடன் விபத்தில் காயம்

திருவனந்தபுரம்,ஜன.09

கேரளாவில் மாநில உள்துறை செயலாளர், அவரது மனைவி மற்றும் மகன் இன்று நடந்த சாலை விபத்தில் படுகாயமடைந்தனர்.

கேரளாவில் முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. இதில் உள்துறை செயலாளராக இருப்பவர் வேணு. இவர் தனது மனைவி சாரதா முரளீதரன், மகன் ஆகியோருடன் காரில் இன்று சென்று கொண்டிருந்துள்ளார். அவர்களது கார் காயம்குளம் பகுதியருகே சென்றபோது, லாரி ஒன்று அதன் மீது மோதி விபத்திற்குள்ளானது. இந்த சம்பவத்தில் வேணு, அவரது மனைவி, மகன் மற்றும் கார் ஓட்டுனர் ஆகியோர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு, பருமலா பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். அவர்கள் அனைவரும் சிகிச்சைக்கு பின்பு உடல்நலம் தேறி வருகின்றனர் என காயம்குளம் போலீசார் தெரிவித்து உள்ளனர். விபத்துக்கான காரணம் என்ன என்பது பற்றி விசாரணை நடந்து வருகிறது.

## இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே குழாய் மூலமாக எரிபொருள் பரிமாறத் திட்டம்



கவுகாத்தி, ஜன.09

இந்தியாவுக்கும், வங்காள தேசத்துக்கும் இடையே நல்லதொரு நட்புறவு உள்ள நிலையில், இந்தியாவில் மேற்கு வங்காள மாநிலம் சிலிகுரியில் உள்ள அசாம் நுமலிகார் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் சந்தையிடல் முனையத்தில் இருந்து வங்காளதேசத்தின் பர்பதிபூரில் உள்ள வங்காளதேச பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்துக்கு குழாய் வழியாக எரிபொருள் எடுத்துச்செல்லத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இதற்காக 130 கி.மீ. தொலைவில் இந்த இந்திய, வங்காளதேச நட்புறவு குழாய்வழி இந்திய ரூ.377.08 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நிதியுதவியைக் கொண்டு இந்த இரு தரப்பு திட்டத்தின் பொறியியற் பணிகள் கடந்த மாதம் 12 ஆம் திகதி முடிந்தது.

இந்த நிலையில், இந்த குழாய் வழி எரிபொருள் விநியோக திட்டத்தை அடுத்த மாதம் தொடங்கி வைக்க திட்டமிட்டிருப்பதாக நுமலிகார் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## திருவனந்தபுரத்தில் பறவைக்காய்ச்சல் பரவல் எதிரொலி; இரண்டாயிரத்துக்கும் அதிக பறவைகளை அழிக்க முடிவு!



திருவனந்தபுரம், ஜன.09

திருவனந்தபுரம் மாவட்டம் அழுர், பெருமாங்குழி பகுதியில் தனியாருக்கு சொந்தமான கோழி, வாத்து பண்ணைகள் உள்ளன. இங்கு ஆயிரக்கணக்கான கோழி, வாத்துகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக இந்த பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த கோழிகளும், வாத்துகளும் அடுத்தடுத்து இறந்துள்ளன.

அதைத் தொடர்ந்து இவற்றின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக போபாலில் உள்ள பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பரிசோதனை யின் முடிவில் பறவை காய்ச்சல் இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து பறவை காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக திருவனந்தபுரம் மாவட்ட கலெக்டர் ஜெரோமிக் ஜோர்ஜ் தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் பறவைக் காய்ச்சல் பரவிய பண்ணையில் உள்ள கோழிகள், வாத்துகளையும், மேலும் ஒரு கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ள அனைத்து பறவைகளையும் அழிக்க முடிவு செய்யப்பட்டது. முதல் கட்டமாக 2 ஆயிரம் பறவைகளை இன்று திங்கட்கிழமை அழிக்க முடிவு செய்துள்ளனர்.

மேலும் நோய் பாதிக்கப்பட்ட பண்ணையை சுற்றியுள்ள 9 கிலோ மீட்டர் பகுதியில் கோழி இறைச்சி, முட்டை விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வெளிப்பகுதிகளில் இருந்து இங்கு முட்டை, இறைச்சி கொண்டு வரவும், இங்கிருந்து வெளியிடங்களுக்கு கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஒற்றுமை ராகுல் காந்தியுடன்

## ராகுல் காந்தியுடன் பாத யாத்திரையில் இன்று பெண்கள் மட்டுமே பங்கேற்பு!

சண்டிகர், ஜன.09

காங்கிரஸ் முன்னாள் தலைவர் மற்றும் வயநாடு தொகுதி எம்.பி.யான ராகுல் காந்தி கடந்த செப்டம்பர் 7ஆம் திகதி இந்திய ஒற்றுமை யாத்திரையை கன்னியாகுமரியில் தொடங்கினார்.

தமிழகம், கேரளா, கர்நாடகா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், மராட்டியம், டெல்லி உள்ளிட்ட மாநிலங்களின் வழியே கடந்து சென்றுள்ளது. கடந்த செவ்வாய் கிழமை டெல்லியின் லோனி பகுதி வழியே உத்தர பிரதேசத்தில் அவரது யாத்திரை நுழைந்தது. அதன்பின்பு, அவரது யாத்திரை கடந்த புதன் கிழமை மாவிகலா பகுதியில் இருந்து பராத் பகுதிக்கு சென்றது. தொடர்ந்து பாக்தத் பகுதியையும் கடந்து சென்றது. இந்த யாத்திரையில் அவரது சகோதரி பிரியங்கா காந்தியும் உடன் கலந்து கொண்டார். கடந்த 6ஆம் திகதி மீண்டும் அரியானாவுக்குள் யாத்திரை நுழைந்தது.அரியானாவின் குருசேத்ராவை இந்த யாத்திரை நேற்று வந்தடைந்து உள்ளது. இந்நிலையில், இந்திய ஒற்றுமை யாத்திரையில் ராகுல் காந்தி உடன் பெண்கள் மட்டும் இன்று பங்கேற்க உள்ளனர் என காங்கிரஸ் அறிவித்து உள்ளது.

இதுபற்றி காங்கிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில், பாரத் ஜோடோ யாத்திரையில் அனைவரும் பெண்களாக இன்று பங்கேற்க உள்ளனர். அதிக ஆச்சரியமளிக்கும்தினத்தில் ஒன்றாக இது இருக்கும். பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் முன்னோக்கிய பயணத்தில் ராகுல் காந்தி தீவிர உணர்வோடும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடனும் செயல்பட்டு வருகிறார் என தெரிவித்து உள்ளது.

இதன்படி, இன்றைய யாத்திரையில் ராகுல் காந்தியுடன் பெண்கள் மட்டுமே கலந்து கொள்கின்றனர். கடந்த டிசம்பரில் ராஜஸ்தானில் சவாய் மாதோப்பூர் மாவட்டத்தில் பீப்புள்வாடா பகுதியை நோக்கிய பயணத்தின்போது, பாதயாத்திரையில் ராகுல்காந்தியுடன் பெண்கள் மட்டுமே பங்கேற்றனர். கடந்த நவம்பர் 19ஆம் திகதி முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு இதேபோன்று, பெண்கள் மட்டுமே ராகுல் காந்தியுடன் யாத்திரையில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாண்டிருப்பில் தொடர்ந்து கவன ஈர்ப்பு போராட்டம்!





(வீ.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீள பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இன்று திங்கட்கிழமை கல்முனை பாண்டிருப்பில் பாரிய கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நான்காவது நாளாக இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு இந்தப் போராட்டத்தை நடத்தியது. 'ஒருமித்த குரலினை உரக்கச் செல்வோம்!' என்ற அடிப்படையில் நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் முன்பாக இப் போராட்டம் காலை 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற்றது.

போராட்டத்தில் பல அரசியல் தலைவர்களின் கலந்து கொண்டார்கள். சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என்று பலரும் கலந்து கொண்டார்கள். அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி, அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் தொடர்ந்து பத்தாம் திகதி (நாளை) செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## லயன்ஸ் ஏற்பாட்டில் தம்பிட்டியவில் நடைபெற்ற சர்வ மத கலாசார விழா





(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சர்வ மத கலாசார விழா மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் உள்ள மகாஓயா தம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை லயன்ஸ் கழக கலாச்சார பிரிவு திட்ட இணைப்பாளர் லயன் துரைராஜசிங்கம் ஆதித்தன் தலைமையிலான குழுவினர் இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

லயன்ஸ் கழக 306ளீ மாவட்ட ஆளுநர் லயன் பெர்னாட் ஹம்லத் அதிதியாக கலந்து சிறப்பித்தார். கிழக்கு மாகாண லயன்ஸ் கழக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மகாஓயா தம்பிட்டிய மகாவித்தியாலயத்தில் நான்கு மதங்களையும் சேர்ந்த சர்வமத தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் சர்வ மத தலைவர்களின் ஆசியுரையும், மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளும் மேடை ஏறின.

இதேவேளை, அங்கு வந்திருந்த சுமார் 100 மாணவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இன நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் வளர்ப்பதற்கு இது போன்ற சமாதான திட்டங்கள் வழிவகுக்கும் என்று கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

விழாவில் மகாஓயா தம்பிட்டிய மகா வித்ய–ாலயம், புல்லுமலை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், உறுகாமம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஆயித்தியமலை தமிழ் கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் கலந்து சிறப்பித்தார்கள்.

## கங்குவேலியில் சிறப்பாக இடம்பெற்ற அகத்திய மாமுனிவரின் ஜெயந்தி விழா



(வி.ரி. சகாதேவராஜா)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'அகத்தியம்' என்ற முதல் தமிழ் இலக்கண நூலை எழுதியவரும், சப்தரிசிகளில் ஒருவரும், சித்தர்களுக்கு எல்லாம் சித்தராக விளங்கிய அகத்திய மாமுனிவரின் குருபூஜை தினம் இன்று திங்கட்கிழமை அவர் வாழ்ந்ததாக கூறப்படும் திருகோணமலை கங்குவேலியில் வெகுசிறப்பாக இடம் பெற்றது.

குருபூஜை தினத்தை முன்னிட்டு கங்குவேலியில் உள்ள அகத்தியர் ஸ்தாபனத்தில்(ஆலயத்தில்) பெரும் யாகமும், அன்னதானமும், இலவச சித்த மருத்துவமுகாமும் இடம் பெற்றன.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை 'அகத்தியர் பெருமானின் ஆயிலிய நட்சத்திர குருபூஜை ஜெயந்தி விழா கோலாகலமாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி, நமசிவாய சுவாமி சிவயோகி மகேஸ்வரன், சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன், தியாகராஜா சுவாமி உள்ளிட்ட பல உறுப்பினர்கள் நேற்றைய பெரும் யாகத்தில் ஈடுபட்டனர்.

உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன், பிரபல தவில் சக்கரவர்த்தி செந்தில் பங்கு பற்றலில் நடைபெற்ற இசைக் கச்சேரி அப்பிரதேசத்தையே அதிர்விசையில் மூழ்க வைத்தது.

அகஸ்தியர் பிறந்த மார்கழி மாத ஆயிலிய நட்சத்திரம் இன்று திங்கட்கிழமைஆறாவதுஉலகசித்தர்தினமும்அனுஷ்ட்டிக்கப்பட்டது

அவர் சித்த மருத்துவத்தின் தந்தையாக தமிழுக்கும் மருத்துவத்திற்கும் பாரிய பல நூல்களை எழுதி இருக்கிறார். அவர் செய்த அந்த மகத்தான பணியை உலகளாவிய மக்கள் ஞாபகப்படுத்தும் வகையில் இந்த தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று அகத்தியர் ஆலயத்தில் இலவசமாக சித்த மருத்துவ முகாமும் நடாத்தப்பட்டதும் சிறப்பம்சமாகும்.

திருகோணமலை கிழக்கு பல்கலைக்கழக சித்தமருத்துவ பீட மாணவர்கள் யாகத்தில் ஈடுபட்டனர். விரிவுரையாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் அன்னதானமும் இடம் பெற்றது.

## மட்டு. பெரியகல்லாற்றில் திருவெம்பாவை நிறைவு

(பழுவூரான்)

கடந்த 10 நாள்களாக மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் இடம்பெற்ற திருவெம்பாவை நிகழ்வு பக்திபூர்வமாக நிறைவடைந்தது.

கடந்த வெள்ளிக்கிழமைகாலை பெரியகல்லாறு ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம் மற்றும் சிவசுப்பிரமணியர் ஆலயம் ஆகியவற்றின் சமுத்திர தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து சுவாமி ஒன்றன்பின் ஒன்றாக ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும், சர்வார்த்த சித்தி விநாகர் ஆலயத்தில் விசேட பூஜைகளுடன் பொன்னூஞ்சல் ஆட்டப்பட்டு, பக்திபூர்வமாக நிறைவு வழிபாடுகள் இடம்பெறுதைசியும் படங்களில் காணலாம்.




# போதைப் பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நிகழ்வு கிளிநொச்சியில்!






போதைப் பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் நிகழ்வுகள் கிளிநொச்சி பாரதி மகாவித்தியாலய பழைய மாணவர்களால் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் பழைய மாணவர்களுக்கான மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி இடம்பெற்றது. ஒவ்வொரு ஆண்டு பிரிவிலிருந்துமாக 15 அணிகள் நட்பு ரீதியில் மோதிக் கொண்டன.

2008 மற்றும் 2015 ஆம் ஆண்டு கல்வி கற்ற அணிகள் இறுதி போட்டியில் பங்கெடுத்தது. போட்டியில் 2015 ஆம் ஆண்டு அணி கிண்ணத்தை தனதாக்கியது.

நிறைவில் வெற்றி பெற்ற அணிக்கான கேடயமும் பரிசும் வழங்கப்பட்டது. இதேவேளை, போதைப்பொருள் விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி கலந்துகொண்டிருந்தமையுடன், பாடசாலை முதல்வர் எஸ்.சிறிதரன், பழைய மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர், கிராம மட்ட அமைபுக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதேவேளை, மேற்படி பகுதியைசேர்ந்த 50 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்களும் 100 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் முன்னாள் பாடசாலை முதல்வர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது. இதற்கான நிதி அனுசரணையை அபிசேக் பவுண்டேசன் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





## அனைவரையும் பொங்கவைப்போம்

கனடாவில் வசிக்கும் சமூகசேவையாளர் சிவலிங்கம் ரட்ணத்தின் நிதிப்பங்களிப்புடன் வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து கைதடி நுணாவிலில் வசிக்கும் 50 குடும்பத்தினருக்கு பொங்கல் பானையுடன் கூடிய பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## மன்னாரில் 'மாற்றத்திற்கான புதிய ஆரம்பம்' எனும் தொனிப் பொருளில் விசேட கூட்டம்!

ஐக்கிய மக்கள் சக்தி மன்னார் மாவட்ட அரசியல் நிலைவரம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான ஆலோசனை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் மன்னாரில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றுள்ளது.

சனிக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளரின் ஏற்பாட்டில் இந்த விசேட கூட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்த விசேட கூட்டம் 'மாற்றத்திற்கான புதிய ஆரம்பம்' எனும் தொனிப் பொருளில் வளமான அபிவிருத்தி வளமான எதிர்காலத்துக்கு எங்களின் ஒன்றிணைந்த தெரிவு என்பதன் அடிப்படையில் நமக்காக நாம் ஒன்றிணைவோம் என்பதை வலியுறுத்தியே இந்தக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, உமா சந்திர பிரகாஷ் மற்றும் வவுனியா மன்னார் மாவட்ட கட்சியின் இணைப்பாளர்கள் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகம் நல்லூரில் திறப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். தொகுதிக்கான பிரதான அலுவலகம் நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.நல்லூர் செட்டித்தெரு பகுதியில் குறித்த அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், யாழ் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அமைப்பாளர் விஜயகாந்த், யாழ். மவட்ட அமைப்பாளர் கு.மதன்ராஜ், யாழ்ப்பாண தொகுதி பிரதம அமைப்பாளர் ஜெயேந்திரன், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவ தியாகேந்திரன், கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மின் கட்டண திருத்தம் இறுதி தீர்மானம் இன்று?

மின் கட்டண திருத்தம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு இன்று (திங்கட்கிழமை) நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் தமது கருத்துக்களை சமர்ப்பிக்க அமைச்சர்களுக்கு ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டது.

இன்றைய அமைச்சரவை கூட்டத்தின் போது அந்தக் கருத்துக்களை பரிசீலித்ததன் பின்னர் மின் கட்டண திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. எதிர்பார்த்தபடி மின்சார கட்டணத்தை அதிகரிக்க வாய்ப்பு கிடைத்தால் மற்றும் நிலக்கரி மற்றும் எரிபொருள் ஆலைகளுக்கு உரிய உள்ளீடுகள் கிடைத்தால், எதிர்வரும் காலங்களில் மின் வெட்டுக்கள் இன்றி மின்சாரத்தை வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# ஈழவர் ஜனநாயக முன்னணி வடக்கு, கிழக்கில் தனித்துவமாக களமிறங்கவுள்ளதாக அறிவிப்பு!



ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் தனித்துவமாக களமிறங்கவுள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் த.பிரபாகரன் தெரிவித்தார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஈழவர் ஜனநாயக முன்னணியின் மத்திய குழு கூட்டம் கல்லடியில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தை தொடர்ந்து ஈழவர் ஜனநாயக முன்னணியின் ஊடக சந்திப்பு நடைபெற்றது. இந்த ஊடக சந்திப்பில் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் த.பிரபாகரன் கருத்து தெரிவித்தார். இன்று தமிழ் மக்கள் ஏமாந்த சரித்திரமே உள்ளதேயொளிய மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுத்தில்லை. இன்று தமிழ் மக்களும் நாங்களும் மாற்றத்தை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கின்றோம்.அந்த மாற்றத்தை உருவாக்கவேண்டிய கடப்பாடு ஈரோஸுக்கு உள்ளது.

## பொகவந்தலாவ எலிப்படை பகுதியில் மாணிக்ககல் அகழ்ந்த நால்வர் கைது!



நோர்வூட் பொலிஸ் எல்லைக்குட்பட்ட பொகவந்தலாவ எலிப்படை 12 ஆம் இலக்க தேயிலை மலை காணிப்பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, ஒருவர் தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளாரென ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கைது சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம் பெற்றதாக ஹற்றன் பொலிஸின் குற்றப்பிரிவிற்கு பொறுப்பான பிரதான பொலிஸ் பரிசோதகரும், பொறுப்பதிகாரியுமான பிரேமலால் தெரிவித்தார்.

மேற்படிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வு தொடர்பாக ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலுக்கு ஏற்ப, மேற்படி சுற்றிவளைப்பின் போதே நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, அவர்களால் மாணிக்ககல் அகழ்விற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றினர்னஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சட்டவிரோத மாணிக்கல் அகழ்வில் ஈடுபட்ட அனைவரும் பொகவந்தலாவ எலிப்படை கீழ் பிரிவை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஹற்றன் பொலிஸின் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

தலைவர்களுடனான கூட்டம், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது மேற்படி யோசனையை நிராகரிப்பதாக பங்காளிக் கட்சிகள் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவுள்ளன.

இதையடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றாகவே போட்டியிடுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி இணங்கி வருமாக இருந்தால், பரந்துபட்ட கூட்டமைப்பாக – கூட்டமைப்புக்கு வெளியில் இருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்வாங்கி தேர்தலில் போட்டியிடும் நிபந்தனையைப் பங்காளிக் கட்சிகள் முன்வைக்கவுள்ளன என்று அறியமுடிகின்றது.

இதேவேளை, பரந்துபட்ட கூட்டமைப்புக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. தமிழரசு மற்றும் ரெலோவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் உருவாக்கிய கட்சிகளை கூட்டமைப்புடன் இணைக்க முடியாது எனவும் வேண்டுமொனால், அவர்கள் மீண்டும் தமிழரசு அல்லது ரெலோவுடன் இணையலாம் என்றும் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### உள்ளூராட்சி……

தேர்தலுக்கு நிதியை வழங்குவதில் இருக்கின்ற சிக்கல், மாவட்ட செயலார்கள் 7 பேர் ஓய்வு – இடமாற்றம் பெற்றமை மற்றும் நெல் கொள்வனவுக்காகப் பணம் ஒதுக்குதல் உள்ளிட்ட பல காரணங்களை அடிப்படையாக வைத்தே தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது என்று அரச உயர்மட்டம் தெரிவிக்கின்றது.

இதே சந்தேகத்தை எதிர்க்கட்சிகளும் தெரிவிக்கின்றன. ஆனால், காரணம் மேற்கூறப்பட்டவை அல்ல.

தோல்விப் பயம் காரணமாகவே தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அவை கூறுகின்றன.




### சர்வகட்சி……

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சர்வகட்சி மாநாட்டை தமிழ் முற்போக்குக் கூட்டணி புறக்கணிக்கும்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அக்கரைப்பத்தனையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நேற்று நடைபெற்ற தொழிலாளர் தேசிய முன்னணி செயற்பாட்டாளர்களின் விசேட சந்திப்பில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக அரசின் அழைப்பையேற்று, மலையக மக்கள் சார்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவராக சென்னை செல்கின்றேன். தமிழக வம்சாவளி தமிழர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே செல்கின்றேன். இதன்போது எமது மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை, துயரங்களை, கஷ்டங்களையெல்லாம் தமிழக முதலமைச்சரிடம் எடுத்துக்கூறவுள்ளேன்.

வடக்கு, கிழக்கில் வாழ்பவர்கள்தான் தமிழர்கள். அவர்களுக்கு மட்டுமே பிரச்சினை உள்ளது என்றே இதுவரை காலமும் நினைத்துக்கொண்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு பற்றி பேசுவது தப்பில்லை. ஆனால், மலையகத்தை மறந்துவிட்டனர். இந்த நிலைமை தற்போது மாறியுள்ளது. மலையகத் தமிழர்களும் சுயமரியாதையுள்ள ஓர் இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நானும், திகாம்பரமும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அரசில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். மறுத்துவிட்டோம். பதவிகள் எல்லாம் எங்களை தேடி வரும் எனக் கூறினோம். நாட்டின் ஜனாதிபதி நீங்கள், எங்கள் மக்கள் மீது அக்கறை கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தோம்.

வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகின்றீர்கள். தேசிய இனப் பிரச்சினையானது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல. எங்களிடமும் பேசுங்கள் என்றோம்.

எமது மக்களுக்கும் அரசியல், சமூக மற்றும் கலாசார அபிலாசைகள் உள்ளன. தேவைப்பாடுகள் உள்ளன. எனவே, எங்கள் பிரச்சினை பற்றியும் கண் திறந்து பாருங்கள், காது கொடுத்து கேளுங்கள் எனவும் குறிப்பிட்டோம்.

மலையகக் கட்சிகளை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்தாதுவிட்டால், சர்வகட்சி கூட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கேற்காது. எங்களை மதித்தால்தான் நாமும் மதிப்போம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வந்தால் போட்டியிடுவோம். நாம் தேர்தலுக்குத் தயார் – என்றார்.

### பரந்துபட்ட……

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று கட்சிகளும் போட்டியிடுவதற்குத் தமிழரசுக் கட்சி இணங்குமாக இருந்தால், பரந்துபட்ட கூட்டமைப்பாகப் போட்டியிடுவதற்கான நிபந்தனையைப் பங்காளிக் கட்சிகள் விதிக்கவுள்ளன என்று அறியமுடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மூன்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை தனித் தனியே எதிர்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று முன்தினம் எடுத்தது. இந்தத் தீர்மானத்தைப் பங்காளிக் கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ ஆகியன நிராகரித்துள்ளன.

இந்தநிலையில் நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித்

### வடமாகாண……

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முற்பகல் 11.21 மணியளவில் சுபநேரத்தில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய ப்ரியந்த வீரசூரிய, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான பதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த மஹிந்த குணரட்ண வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2023 இல் வெளியிடப்பெற்றது.